IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| Miscellaneous | ) | Case No. CC.6/2022 |
| Preliminary Register | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw11 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : திருமதி.ரேவதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.05.2023

நான் தற்பொழுது விருதுநகர் மாவட்ட குற்றபதிவேட்டு கூடத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் இதற்கு முன்னர் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய பொறுப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 3.7.2019 ம் தேதி 17.00 மணிக்கு கனம் சாத்தூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் பெற்றப்பட்ட CRMP.No.1188/2019 பிரகாரம் தபாலை பார்வையிட்டு புகார் மனுவின் தன்மைக்கேற்ப

மேற்படி காவல் நிலைய குற்ற எண்.10/2019, சட்டபிரிவுகள் 294(பி), 494, 506(1) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். மேற்படி அசல் புகாரினையும், முதல் தகவல் அறிக்கையினையும் கனம் சாத்தூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1 க்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பினை விசாரணைக்காக அனைத்து மகளிர் காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் திருமதி.ராஜசுலோசனா என்பவரிடம் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் இருந்து புகார் தபாலில் வந்ததா அல்லது நேரில் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் நிலைய ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். நான் புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக உள்ளது என்றால் சரிதான். அதில் நிலைய ஆவணங்களை பார்த்தாக இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட குவிமுச பிரிவு 156(3) மனுவின் பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு காவல் நிலைய கோப்பில் உள்ளதா என்றால் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையுடன் அனுப்பிவிட்டோம். CRMP. NO.1188/2019 க்கான உத்தரவு நகல் எங்கள் வழக்கு கோப்பில் உள்ளது. அந்த உத்தரவில் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய தான் உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விசாரணை செய்வதற்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை செய்வதற்கு நீதிமன்றத்தில் உத்தரவிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யக்கூடாது என்றும் இல்லை. சாட்சிப்பட்டியலில் வேண்டாராஜன் என்று ஒருவர் உள்ளார் என்றால் சரிதான். அவரை நான் விசாரித்து உள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து குவிமுச 156(3) மனு அல்லது உத்தரவு எந்த தேதியில் காவல் நிலையத்தில் கிடைக்கப்பெற்றது என்றால் காவல் நிலைய கோப்புகளை பார்த்தால் தான் தெரியும். முதல் தகவல் அறிக்கையில் 3.7.2019 ல் கிடைக்கப்பெற்றதாக உள்ளது. 4.7.2019 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் 3.7.2019 ம் தேதியில்

முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். நான் 23.6.2019 ம் தேதியில் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பொறுப்பு பணியில் சேர்ந்தேன். புகார் மனு என்று வந்தது என்பதை காவல் நிலைய கோப்புகளை பார்த்ததால்தான் தெரியும் நான் அந்த புகார் மனு வை பெற்ற தேதி 3.7.2019 ம் தேதி ஆகும். அன்றைய தேதியிலேயே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அன்றைய தேதியிலேயே அனுப்பி வைத்துள்ளேன். நான் நீதிமன்றத்திற்கு 4.7.2019 ம் தேதி காலை 10.30 மணிக்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றால் 4.7.2019 ம் தேதியில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்ட தேதி 3.7.2019 தேதியா அல்லது 4.7.2019 தேதியா என்றால் 4.7.2019 தேதி ஆகும். 22.6.2019 ம் தேதியில் பெண் காவலர் கலா என்பவர் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட புகாரை பெற்றுக்கொண்டதற்காக அவர் கையொப்பம் செய்துள்ள அஞ்சலக ஒப்புகை அட்டை தான் என்னிடம் காண்பிக்கப்படும் புகாரை பெற்றுக்கொண்டதற்கான ஆவணம் தான் என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ.4 ஆகும். 22.6.2019 ம் தேதியிலேயே அந்த புகார் மனு காவல் நிலையத்தில் பெறப்பட்டது என்றாலும், வழக்கிற்காக நான் 3.7.2019 ம் தேதி பெற்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் 23.6.2019 ம் தேதியில் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பொறுப்பு பணியில் சேர்ந்தேன். புகார் மனு என்று வந்தது என்பதை காவல் நிலைய கோப்புகளை பார்த்ததால்தான் தெரியும் நான் அந்த புகார் மனு வை பெற்ற தேதி 3.7.2019 ம் தேதி ஆகும். அன்றைய தேதியிலேயே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அன்றைய தேதியிலேயே அனுப்பி வைத்துள்ளேன். 3.7.2019 ம் தேதியில் முதல் தகவல் அறிக்கையை அனுப்பிவிட்டதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. 3 ம் தேதி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை அன்றைய தேதியிலேயே காவலரிடம் ஒப்படைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை மறுநாள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்ட நேரமானது மாலை 5.00 மணி ஆகும். நீதிமன்றத்தில் இருந்து வந்த புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் அ.சா.1 சென்னையில் இருப்பதாக உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 ஐ நான் எப்போது காவல் நிலையத்திற்கு வரவழைத்தேன் என்றால் நான்

வரவழைக்கவில்லை. அவராகவே வந்திருந்தார். புகார்தாரருக்கு நான் எந்த அழைப்பாணையும் அனுப்பவில்லை என்றால் நிலைய ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரர் கையொப்பம் செய்திருந்த நிலையில் அந்த கையொப்பம் எங்கு வைத்து பெறப்பட்டது என்றால் நிலையத்தில் வைத்து பெறப்பட்டது. 10 நாட்கள் காலதாமத்தோடு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள நிலையில் அதற்கான காரணத்தை முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு காரணம் சொல்லாததற்கு தனிப்பட்ட காரணம் ஏதேனும் உண்டா என்றால் இல்லை. 10.6.2019 ம் தேதி இந்த வழக்கு சம்பந்தமாக ஏற்கனவே நேரில் ஆஜராகி புகார்தாரர் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. காவல் நிலையத்தில் அந்த புகார் உள்ளதா என்றால் நிலைய கோப்புகளை பார்க்க வேண்டும். 12.6.2019 ம் தேதி விருதுநகர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார்தாரர் புகார் கொடுத்து எங்கள் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்களா என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தார்களா என்றாலும், அந்த மனுவின் நிலைய என்ன என்றால் 4.7.2019 ம் தேதி அந்த நடப்பு தாள் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.10/2019 பதிவு செய்ததின் படி முடித்து வைக்கப்பட்டது. விருதுநகர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் இருந்து வரப்பெற்ற புகார் மனுவின் மீது 22 நாட்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளோம் என்றால் சரியல்ல. 10.6.2019 ம் தேதி புகார்தாரர் கொடுத்த புகார் மனுவின் மீது 25 நாட்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளோம் என்றால் சரியல்ல. புகார்தாரர் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவிற்கும் விருதுநகர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரின் பேரிலும் நடவடிக்கை எடுக்காததற்கு தனிப்பட்ட காரணம் உண்டா என்றால் காவல் நிலைய கோப்புகளை பார்த்ததால் தான் தெரியும். அ.சா.1 புகார்தாரர் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவிற்கும் விருதுநகர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரின் பேரிலும் நடவடிக்கை எடுக்காததற்கு அந்த புகாரில் உண்மை தன்மை இல்லாமலும் முகாந்திரம் இல்லாத

காரணம்தான் என்பது எனது விசாரணையில் தெரியவந்துள்ளது என்றாலும் அதனால்தான் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்காக நீதிமன்ற உத்தரவுபடி சாட்சிகள் யாரையும் விசாரணை செய்துள்ளேனா என்றால் காவல் நிலைய கோப்புகளை பார்த்தால் தான் தெரியும். புகார்தாரர் புகாரிலும் நான் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கையிலும் புகார்தாரருக்கும் 7ம் எதிரிக்கும் எங்கு வைத்து யார் முன்னிலையில் எத்தனை மணிக்கு 2வது திருமணம் நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகாரிலும் நான் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கையிலும் 1 முதல் 6 எதிரிகள் வரதட்சினை கேட்டதாக உள்ளதா என்றால் புகார் மனுவில் உள்ளது. புகார் மனுவில் எந்த இடத்தில் உள்ளது என்றால் 2ம் பக்கத்தில் 3வது பாராவில் 4வது வரியில் ஏற்கனவே உள்ள குற்ற எண்.7/2017 ல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் அதற்கு பின்னிட்டு வரதட்சினை கேட்டதாக இல்லை. குற்ற எண்.7/2017 வழக்கில் எதிரிகள் விடுதலை ஆன விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்ன நாள் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யவில்லை என்றாலும் அதனை சொன்ன நாள் நேரத்தில் சொன்னவிதத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரரால் நீதிமன்றத்தில் நதாக்கல் செய்துள்ள குவிமுச பிரிவு 156(3) மனுவில் பிறப்பித்துள்ள நீதிமன்ற உத்தரவை மீறி அதிக சிரத்தை எடுத்து எதிரிகள் மீது நான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாண்பமை உச்சநீதின்ற தீர்ப்பின்படி குடும்ப வழக்குகளில் சாட்சிகளுக்கும், எதிரிகளுக்கும் அழைப்பானை அனுப்பி விசாரித்த பின்னர் வழக்கு பதிவு செய்ய தேவைப்படுமாயின் மட்டுமே முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ய வேண்டும் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

7 முதல் 9 வரைவரையிலான எதிரிகள் தரப்பில் 1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.யை தங்களுடையதாக ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறுமுதல் விசாரணை

1வது எதிரிக்கும் 7 எதிரிக்கும் நடந்த 2வது திருமணம்குறித்து புகார் மனுவில்

4 வது பத்தியிலும், முதல் தகவல் அறிக்கையிலும் சொல்லப்பட்டுள்ளதா புகார் மனுவில் 2 வது பக்கத்தில் 4 வது பத்தியில் தொடர்ச்சியாக 3 ம் பக்கத்தில் 4 ம் பத்தியில் புகார்தாரரின் கணவர் 1 வது எதிரி கடந்த 6.6.2019 ம் தேதி சிவகாசி வட்டம், விஸ்வநத்தம் கிராமத்தை சேர்ந்த மாரியப்பன் மகள் மகாலட்சுமி என்பவரை 2 வது திருமணம் செய்து வெற்றிலையூரணியில் உள்ள 1 ம் எதிரி வீட்டில் வசித்து வருகிறார்கள் என்ற தகவலை வாதிக்கு எம்.வேண்டாராஜா என்பவர் சொன்னார். இந்த தகவலை கேட்டு மனுதாரர் அதிர்ச்சியும், மனவேதனையும் உண்டதாக கூறினார்.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட மறு கு.வி.

முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்வதற்காக வேண்டாராஜா என்பவரிடனம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை.

மறு கு.வி – இல்லை.